04175 - 236654 / 235295

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)
Accredited with "B+" GRADE by NAAC
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

11.03.2023

# சண்முகா கல்லூரியில் 27 ஆம் ஆண்டு விளையாட்டு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 27 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக விஜய் டிவி புகழ், நகைச்சுவை நடிகர் **KPY.பாலா** கலந்துகொண்டு, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமையுரையாற்றினார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலையுரை நிகழ்த்தினார். முன்னதாக, முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். விளையாட்டு அறிக்கையினை உடற்கல்வி இயக்குநர் முனைவர் **எம்.கோபி** வாசித்தார். விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் **பி.இராமச்சந்திர உபாத்தியாயா, டாக்டர் தையா கிருஷ்ணமூர்த்தி, எஸ்.என்.சௌந்தர்ராஜன், ஏ.சாந்தகுமார், பி.என்.கே.இராஜேந்திரன், ஏ.அருணாசலம், ச.தமிழரசி, மணிமொழி முத்துசாமி எம்.முத்துகுமார், பி.பரிமளா, எம்.ரெட்டிராமு, ஜெயா சக்திகுமார்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** மகிழ்வுரையாற்றினார். துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். நிறைவாக, பொருளாளர் **எ.ஸ்ரீதர்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினர் **விஜய் டிவி புகழ் KPY. பாலா** கலந்து கொண்டு, பல்வேறு கலைத்திறமைகளுடன் பல குரல்களில் நகைச்சுவை கலந்த நிகழ்ச்சிகளை மாணவர்களுக்கு வழங்கிச் சிறப்பு செய்தார். அதோடு, மாணவர்களாகிய நீங்கள் வாழ்வில் பல திறமைகள் மற்றும் கலைகளை வளர்த்துக்கொள்வதோடு, எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றதோடு, உங்களுக்கு நீங்களே முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும், பதக்கங்களையும் வழங்கிச் சிறப்பித்தார்". பின்னர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், பத்திரிக்கை நண்பர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினைக் கல்லூரியின் துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள், அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
Accredited With "B+" Grade by NAAC
NAAC
"B+" GRADE